
# காலங்கள்



கிருஷாந்தி ரட்ணராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr A KUGANESWARALINGAM
NO-72, 02ND LANE
ANANDAPURI
TRINCOMALEE

# காலங்கள்

கவிதைகள்
நாட்குறிப்புகள்

கிருஷாந்தி ரட்ணராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் : கிருஷாந்தி ரட்ணராஜா

பதிப்பு : 07 செப்ரெம்பர் 1998

பதிப்புரிமை : அமுதவல்லி ரட்ணராஜா

வெளியீடு : கூடல் பதிப்பகம்
198/2, கீழை வீதி,
உவர்மலை,
திருகோணமலை.

வடிவம் : த நியூட் குறுப்
28, எபனேசர் பிளேஸ்,
தெகிவளை.

விலை : 40/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எண்பதுகளிற்கு முன்னர் ஈழத்துத்தமிழ் இலக்கியப் படைப்பாக்க முயற்சியில் ஈடுபாடு கொண்டிருந்த பெண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதிலும் கவிதைத்துறையில் பங்களிப்புச் செய்தவர்களை எண்ணினால் ஓரிரு விரல்களுக்கு மேல் மடியாது. இராஜம் புஸ்பவனம், செளமியா எனும் பெயர்களே ஞாபகத்தில் எழுகின்றன. இவர்களும் எழுபதுகளில்தான் எழுத ஆரம்பித்தார்கள். பெண்கள் ஏன் அதிகம் ஆக்க இலக்கியத்துறையில் ஈடுபடவில்லை என்பதற்கான சமூகவியற்காரணிகள் நாம் அறிந்தவையே. கல்வி என்பது வயிற்றுப்பாட்டுக்கான ஒன்று என்றாகிவிட்ட நமது தமிழ்ச் சூழலில் பெண்களுக்கான கல்வி என்பதும் அவ்வாறானதாக மட்டுப் படுத்தப்பட்டதோடு அவர்களுக்கான விடுதலைக்கு உதவாமல் இன்னுமொரு சுமையாக மாறிவிட்டது என்பதுதான் கொடுமையானது.

ஆனால் எண்பதுகளில், வளர்ச்சியெய்திய தமிழ்த் தேசியப் போராட்டச்சூழலில், இந்நிலை மாற்றமடைகிறது. தீவிரவாத இயக்கங்களில் பெண்கள் உள்வாங்கப்படுதல், அவற்றுள் மகளிர் அணிகள் கட்டப்படுதல், பெண்களுக்கான இதழ்கள் வெளிக்கொண்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரப்படுதல், இயக்கங்களின் உள்ளேயும், சமூகமட்டத்திலும் பெண்களின் வாசிப்பு மட்டம் அதிகரித்தல், பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு உள்ளிட்ட பாதிப்புகளால் பெண்களின் உணர்வுநிலை கொந்தளிப்படைதல், பால் சமத்துவம், பெண்ணியம் சம்பந்தமான கருத்தாடல் என இன்னோரன்ன காரணங்களால் தமிழ்ப்பெண்கள் குறிப்பாக இளம்பெண்கள் மத்தியில் சிந்தனை மாற்றம் ஏற்படுகிறது.

இது பல புதிய இளம் பெண் படைப்பாளிகளின், குறிப்பாக கவிஞைகளின் தோற்றத்திற்குக் காரணமாகிறது. உணர்வு நிலைக் கொந்தளிப்பை வெளியீடுசெய்யும் வடிகாலாகக் கவிதை வடிவம் பெரிதும் கைகொடுப்பதால் பல கவிஞைகள் அக்கவிதை வடிவத்தைக் கையாண்டு பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கெதிரான எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தினர். இவ்வாறாக இவர்கள் கவிதை வடிவத்தைத் தேர்ந்து கொண்டமையை நாம் மிகவும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். தேங்கிப்போன குடும்பப்பாங்கான கதைகளை வாசிப்போராகவும், *(இன்று வரை தொடரும் ரமணிச்சந்திரன் வாசிப்பை நினைவு கொள்க)* அவைபோன்ற கதை சொல்லிகளாகவும் *(பாலேஸ்வரிகள்)* இருந்த ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் மத்தியில் தமிழ்க் கவிதையாக்கம், வாசிப்பு என்ற ஈடுபாடு ஒரு புதிய கண்டடைவாகும். "சேற்றின் நடுவில் புதைந்துள்ள ஒரு கல்லாக என்னை நான் கண்டெடுத்துள்ளேன்" என்ற சிவரமணியின் கூற்றோடு இந்தக்கவிதையைக் கண்டடைந்தமையை ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த உண்மை எத்தகையது என்பது விளங்கும் உண்மை இதுதான். தன்னை ஒடுக்கும் ஆக்கிரமிப்புச் சூழலின் மீது வீசுவதற்காக அழுக்கு மிகுந்த இந்தச் சூழலின் மத்தியில் புதைந்திருந்த பெண்மையின் வீரியம் கண்டெடுத்த கல்தான் இந்தக் கவிதை வடிவம். *சிவரமணி* போன்ற கவிஞைகளிடம் அந்தக் கல்தான் இருந்தது.

எண்பதுகளில் இவ்வாறான கண்டடைவின் முதலாவது பெறுபேறாக வெளிவந்தது "சொல்லப்படாத சேதிகள்" என்ற பல கவிஞைகளின் கவிதைத் தொகுப்பாகும். இது காறும் ஈழத்துத்

தமிழ்ச் சூழலில் சொல்லப்படாத சேதிகளாக அமுக்கி வைக்கப் பட்டிருந்த பெண்களின் பக்கம் மூடுண்ட வாசல்களை உடைத்துத் திறந்து கொண்டு வெளிவந்தது. "சொல்லப்படாத சேதிகள்" ஐ அடுத்து *மைத்ரேயி, சிவரமணி, வானதி, கஸ்தூரி, பாரதி, ஸுல்பிகா* ஆகியோரின் தொகுப்புகள் பலவும் வெளிவந்தன. தொகுப்புகளாக வெளிவராவிடினும் நிரம்பவே எழுதியுள்ள *மைதிலி, மதுபாஷினி, பவானி* ஆகியவர்களின் கவிதைகளை தொகுப்பாக வெளிக் கொண்டுவருவதில் நண்பர் ஒருவர் (மது) ஈடுபட்டுள்ளார். இவர் களைவிடவும் *நாமகள், ஆதிரை, தாட்ஷாயணி, பெண்ணியா, ரேவதி, ஔவை, கலா, கொற்றவை, ஆகர்ஷியா, நிருபமா* என்போரும் எழுதிவருகின்றனர். பெண்ணின் குரல், நிவேதினி, பெண் என வெளிவரும் பெண்களுக்கான இதழ்களிலும் இன்னும் புலம்பெயர் சஞ்சிகைகளிலும் எழுதி வரும் கவிஞைகளும் உள்ளர். வன்னிப் பிரதேசத்தில் வாழ்நிலை மிகுந்த நெருக்கடிக்குள்ளான நிலையிலும் எழுதிவரும் பெண் எழுத்தாளர்களையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இன்றைய யுத்தகால நெருக்கடியில் பெண்களே பெரிதும் வாழ்வியல் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றனர். பாலியல் வல்லுறவுக் குள்ளாதல், விதவைகள் ஆக்கப்படுதல், பிள்ளைகளை இழத்தல், பிள்ளைகளும் தாமும் அங்கவீனமுறுதலினால் ஏற்படும் மனப் பாதிப்புக்கள், போர்ச்சூழல் அதிர்ச்சிகளால் கருச்சிதைவு, மனச் சிதைவுக்குள்ளாதல் எனப் பல்வேறுவிதமான துன்பதுயரங்கள் சூழ்ந்த வாழ்வு இன்றைய ஈழத்துத் தமிழ்ப் பெண்களினது. எந்தப் போராட் டச்சூழல் பெண்களினதும் உரிமை பற்றிக் குரலெழுப்பக் காரண மாயிற்றோ அதைத் தொடர்ந்த முடிவற்ற அரச பயங்கரவாதத்தின் மூர்க்கத்தனங்களால்தான் இன்றைய ஈழத்துத் தமிழ்ப் பெண்களின் வாழ்வும் பாழாக்கப்பட்டுவருகிறது. எந்தப் போர்ச்சூழல் இனவுரிமை, பெண்ணுரிமை பேணும் பெண்படைப்பாளிகளை உருவாக்கியதோ அதே சூழல்தான் அவர்களில் பலரை உருவழித்தும் உள்ளது என்பதையும் நாம் மனங்கொண்டாகவேண்டும். *சிவரமணி, செல்வி, பாரதி, வானதி, கஸ்தூரி* என்று எத்தனை இழப்புக்கள். போர்ச்சூழல் எத்தனை பெறுமதிமிக்க உயிர்களைப் பலிகொண்டது. இதிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பெண்படைப்பாளிகளும் அடங்குவர். இத்தகையோரில் இது காறும் தம்மை வெளியே இனங்காட்டாது இளம் வயதிலேயே கால மானவர்களும் உண்டு. இந்த வரிசையிலே ஒருவராக வந்து சேருகிறார் *கிருஷாந்தி ரட்னராஜா.*

*கிருஷாந்தி* திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களில் இலக்கிய அக்கறையுடையோர் நடுவில் அறியப்பட்டவர். போர்க்கால நெருக்கடி துரத்த திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து அங்கு தனது கல்வியைத் தொடர்கையில் தனக்குப் பயிற்றுவித்த *சத்தியமூர்த்தி, மதுசூதனன்* மற்றும் சக மாணவத்தோழிகளான *மைதிலி, ரங்கா* ஆகியோருடன் கொண்ட தொடர்பினால் இலக்கியத்தில் அக்கறை கொண்டார். தேர்ந்த வாசிப்பிலும் ரசனையிலும் நல்ல பரிச்சயம் கொண்டார். 1995 முற்பாதியிலிருந்து 1998 முற்பாதிவரை மட்டக்களப்பில் தாதியர் பயிற்சி நெறிபயிலுங் காலத்தில் மட்டக்களப்பு வாசகவட்ட அன்பர்கள் குறிப்பாக காலஞ்சென்ற *ஆனந்தன்* போன்றோரிடம் ஏற்பட்ட இலக்கிய உறவுகளால் தன்னைச் சுடர் தீட்டிக் கொண்டார். பின்னர் திருகோணமலை தள வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றிய ஒன்றரை மாதமும் கடும் நோய்வாய்ப்பட்டிருந்து 09/08/1998 அன்று கொழும்பு வைத்தியசாலையில் காலமானார்.

*கிருஷாந்தியின்* தேர்ந்த ரசனை, வாசிப்பு என்பவற்றை அறிந்த எம்மைப்போன்ற சில இலக்கிய நண்பர்கள், இவரது நாட் குறிப்பு எழுதும் பழக்கத்தையும் அறிந்து அவரது குடும்பத்தவர்களிடம் விசாரித்தபோது அவர்கள் இரண்டு பயிற்சிப் புத்தகங்களை என்னிடம் தந்தார்கள். அதிலே ஒரு பயிற்சிப் புத்தகம் நிரம்ப தான் பெற்று வாசித்த சிறந்த நூல்களிலிருந்து சிறந்த பகுதிகளை எழுதி வைத்திருந்தார். *சுந்தரராமசாமியின்* "பிச்சமூர்த்தியின் கலைமரபும் மனித நேயமும்" நூலிலிருந்து *ராஜம் கிருஷ்ணனின்* நூல்கள் வரையிலும் ஆத்மானாம் போன்ற கவிஞர்களின் கவிதைகள் வரை பிடித்த பகுதிகள் எழுதப்பட்டிருந்தன. மற்றைய பயிற்சிப் புத்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93ம் ஆண்டில் எழுதப்பட்ட நாட்குறிப்புகளுடன் இடைக்கிடை கவிதைகள் என கலந்து எழுதப்பட்டிருந்தன. 95, 96 இல் எழுதப்பட்ட கவிதைகளும் அதில் இருந்தன. அக் காலத்திலும் பிறகும் எழுதப் பட்டதான நாட்குறிப்புகள் எதுவும் இல்லை. இவருக்குப் பிடித்த நூல்களின் பகுதிகள், நாட்குறிப்புகள், இவரால் எழுதப்பட்ட கவிதைகள் எல்லாவற்றையும் ஒரே பார்வையில் நோக்கும் ஒருவருக்கு இவரது முழுமை நோக்கிய பார்வை புலப்படும். இங்கு நான் இவரது நாட்குறிப்புகளையும் (சில நீங்கலாக), கவிதைகளையும் (எதுவும் நீக்காமல்) தொகுத்துப் பிரசுரிப்பதன் காரணம் இவரது பார்வை முழுமை வெளித்தெரியவரும் பொருட்டாகவும் இவருக்கிருந்த சமூகப் பார்வையும் அக்கறையும் புலப்படும் பொருட்டாகவும்தான். இவரது குறிப்பில் காணப்படும் *அஸ்தனின* "கலைகளின் ஆற்றல்" பகுதி யிலிருந்து "நாம் மட்டுமே நமக்குள் ஒரு நீண்ட (சுய விசாரணை) தற் விசாரணைப் பயணத்தை மேற்கொணடு நமது வாழ்வின் ஒருமை நேயத்தை உய்த்து அறிய முயலுகிறோம்" என்பதையும், *தணிகைச் செல்வனின்* "நான் இன்னும் நானே" கவிதையிலிருந்து

*"நான் இருந்தேன் பொம்பளையாய் நான் இருக்கிறேன் - இனி*
*நானழித்துப் புதியவளாய்த் தோலுரிக்கிறேன்*
*ஏன் பிறந்தேன் என்று இனியும் வியர்த்திட மாட்டேன் - உலகம்*
*என்னில் பாதி அதனை விட்டுக் கொடுத்திட மாட்டேன்"*

என்பதையும் சேர்த்துப் பார்த்தோமானால் இவர் வரித்துக் கொண்டுள்ள பார்வைநோக்கு இத் தொகுப்பினூடே நமக் குத் தெளிவாகப் புலப்படும். புதியவளாய்த் தன்னைத் தோலுரித்து தனக்குள் ஒரு விசாரணைப் பயணத்தையும் நடத்தியவாறே, தன்னில் பாதியாக உலகத்தையும் (இதுவோர் புதிய அர்த்த நாரீஸ்வரம்) இணைத்து ஒருமை நேயத்தைக் கண்டடையும் ஓர் நோக்கு இவரது. "பூமிக்கும் வானுக்கும் அப்பால்" "எது உண்மை" என்ற இரண்டு கவிதைகளிலும் தோற்றத்துக்கப்பாலான உண்மையைத்தேடும் நோக்கைக் காண்கிறோம். ஏற்கனவே தன்னுள் இருப்புக்கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்ததை எங்கோ தொலைத்துவிட்டதாகவும், அது எங்கேயுமல்ல கண்டடையக் கூடிய அருகில்தானென 'தேடுதல்' என்ற கவிதையில் குறிப்பிடும் இவர் "தேடுதல் எப்படி?/ சிந்தனையில்லாக் குழந்தையாக/ தேடுதல்/ ஆரம்பிக்கட்டும்" என்கிறார். குழந்தையின் களங்கமின்மை, விடாப்பிடி, பெரிய அறிவார்த்த வேடங்களற்றிருத்தல், இவைதான் குழந்தையைப் போலத் தேடுதல் என்பதில் இவர் குறிப்பிடுவதாய் இருத்தல்வேண்டும். இவர் தேடுவதும் குழந்தைக்கே சொந்தமாயிருந்த ஆன்மாவின் களங்கமின்மை என்பதாகவும் கொள்ளலாம். இவ்விதம் விரிக்க விரிக்க வேறு வேறு பொருள்தரும் யாரும் காணாத ஆர்ப்பாட்டமில்லாத பார்வை இவருக்குச் சொந்தமானது.

"ஆண் மனிதனின் வெற்றி" என்ற கவிதையில் போக்குவரத்து நெருக்கடியினுள் பெண்மையைத்திருகும் ஆண்களின் கயவாளித்தனத்தைச் சாடுகையில் "நாக்கிழிப் புழுக்களாய் நெளியும் பெண்கள் இருக்கும் வரையில்" என்று கவிதையின் இறுதியில் பெண்களையும் சாடுகின்றார். இதை ஆண் மனிதனின் 'வெற்றி' என்று குறிக்கும் பொழுது அது ஆண்களின் தலையில் ஓங்கி விழும் சம்மட்டி ஆகின்றது. இது போலவே "நீ கேட்க வேண்டியது" என்ற கவிதையில் பெண்களிடம் இவர் அழுத்தும் இடம் மிகவும் காத்திரமானது. "தாலி என்ற வேலியை/ உனக்கு நீயே போட்டுக் கொள்வது ஏன்/ உனது பாதுகாப்புக்கா?/ இல்லை இது உனக்கு சிறை/ நீ கேட்க வேண்டியது/ நீயும் ஒரு மனிதன் என்பதை/ உன் இருத்தலுக்கான சுதந்திரத்தை." மேற்படி கவிதை வரிகள் மிகவும் எளிய மொழியில் பேசும் பொழுதும் அழுத்தம் மிகுந்ததாக வந்து விழுகின்றன. இவரது கவிதைகளின் அழகே எளிய முறையில் பேசுவதும் அதனுள்ளே அழுத்தம் மிகுந்த கருத்தின் கனதி ஏறியிருப்பதும் தான். இவரது கவிதை மொழியின் எளிமை இவரது நாட்குறிப்பில் இவர் கையாளும் மொழியில் இருந்து வேறுபடாதது ஆகும். நாட்குறிப்பில் இவர் எந்த மொழியைக் கையாள்கின்றாரோ அதிலிருந்தும் துருத்திக்கொண்டு தெரியாத மொழியின் எளிமையே கவிதையாய் இலங்கும் எளிய நேர்த்தியான வடிவம் மனசை ஈர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நாட்குறிப்புகள் இவரது உண்முகம் எவ்வளவு உண்மையானது என்பதைத் திறந்து காட்டுகிறது. சாதாரண ஏழை எளிய மக்களிடம் இவர் கொண்டிருக்கும் நேயம் இவரது தாய், தந்தை, சகோதரியரிடத்தில் கொண்டிருக்கும் நேசத்திற்கு சிறிதும் குறைந்ததல்ல என்பதை இவரது நாட்குறிப்புகள் காட்டுகின்றன. தமது போலி அரசியலால் மக்களை ஏமாற்றுவோரை கிழித்துக்காட்டும் இவரது பார்வை தமது குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும் கூட ஒரு விலகல் நோக்கிலிருந்து அறிவுபூர்வமாக கிழித்து அலசு கிறது. கனவாகிப் போய் விடுமோ தனது வாழ்வு என்று தனது வாழ்வுகுறித்து ஏங்கும் இவரது கவிதைபோலவே நாட்குறிப்பிலும் "எவ்வளவு அதிககாலம் வாழமுடியுமோ அத்தனை காலமும் வாழ வேண்டும் என்று விரும்பிய நான் ஏனோ என்னையும் அறியாமல் செத்துப்போய்விடுவேனோ என யோசிப்பு வருகிறது" என்று குறிப்பிடுகிறார். மனித வாழ்வு என்பது நிச்சயமற்றுப்போன, பெறுமதி யற்றுப்போன போர்க்காலச் சூழலில் இவ்வாறான ஒரு இளம் மனதின் ஏக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும். அதே தருணம் நீண்ட காலமாக மரணத்துக்கப்பாலான வாழ்வை தேடும் மனிதனின் ஏக்கமும் உண்டு என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். தன்னையும், தன்னில் பாதியான உலகத்தையும் தழுவியதான விசாரணைப் பயணமாக ஒரு கலைஞரின் பயணம் அமையும்பட்சத்திலேதான் அது தனக்கும் உலகுக்கும் பயனளிக்கும் என்பதை கிருஷாந்தியின் இந்தத் தொகுப்பின் மூலம் ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி எளிமையாக நாம் புரிந்து கொள்ளவும் வேண்டும். இந்தப் புரிதல் ஏற்படுமாயின் ஈழத்தின் தமிழ்க் கவிதைத்துறையில், பெண் படைப்பாளிகள் வரிசையில் கிருஷாந்திக்கும் ஒரு மறக்க முடியாத இடம் என்றும் இருக்கும் என்பது என் எண்ணம்.

சு. வில்வரெத்தினம்

திருகோணமலை.
02/09/1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைகள்

மனிதன் என்பவன்தான் யார்? தாவரவிலங்கினத்திலிருந்து அவன்தான் எப்படி வேறுபடுகிறான்? மானுடனின் ஆன்மாவை விரிவாகப் புரிந்துகொள்வது அவசியம். இயற்கையில் இதர உயிர்வர்க்கங்கள் வெறுமனே உயிர்வாழ்ந்து மறைந்து விடும்போது நாம் மட்டுமே நமக்குள் ஒரு நீண்ட (சுயவிசாரணை) தற் விசாரணைப் பயணத்தை மேற்கொண்டு, நமது வாழ்வின் ஒருமை நேயத்தை உய்த்து அறிய முயலுகிறோம். ஆனால் நடைமுறையில் நமது கலாச்சாரத்தின் எந்த அம்சமும் இந்த உள் நோக்கிய விசாரத்தைத் தடுக்கவே சூழ்ச்சி செய்கிறது. நமக்குள் நாம் புரியும் ஓட்டமும், நமக்குள் இருக்கும் சிருஷ்டி ஆற்றலை நாம் புரிந்து கொள்ளச் செய்யும் முனைப்பும் - அவற்றிற்கெதிராகவே செயல்படும் ஒரு சமுதாய அமைப்பு நம்முடையது.

- *'கலைகளின் ஆற்றல்' அஸ்தன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்கள்

ஓ! என் கனவுகளே!
கனவுகளாகவே இருந்து விடப் போகின்றனவோ?
நான் கூடக் கனவாகி விடுவேனோ?
அப்பொழுது
என்னை யாரேனும்
கனவு காண்பார்களா?
நிச்சயமாக
நனவாகிக்கூட விடலாம்
காலம் தான்
பதிலுரைக்க முடியும்
காலம்............ காலம்
காலத்துக்கும் முடிவுண்டோ?

24-02-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏணிப்படிகள்

மீண்டும் மீண்டும் வந்து போகும் பருவகாலங்கள்
ஒவ்வொருகாலத்திலும்
ஒவ்வொரு நினைவுகள்,
கனவுகள்,
ஆனாலும் அவை
மீண்டும் மீண்டும்
வருகின்றன, போகின்றன.
வாழ்க்கையின் பருவங்களோ
ஒரே தடவையில் அக்கணமே ஏற்றுக் கொள்ளவும்,
மறுகணமோ இன்னொன்றை
ஏற்றுக் கொள்ளவும்
எப்போதும் தயாராகவே.
ஒவ்வொரு கணமும்,
ஏணிப்படிகளில் ஏறுவதற்காகவே

05-04-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடுதல்

எங்கோ
என்னைத் தொலைத்து விட்டேன்.
எங்கோ
தொலைவில் அல்ல
அருகில் தான் தொலைத்ததாக
எண்ணம்
தேடுதல் எப்படி?
சிந்தனையில்லாக் குழந்தையாக
தேடுதல்
ஆரம்பிக்கட்டும்.

07-07-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு யூலை

கறுப்பு யூலையும் வந்ததோ
பத்து வருடங்களும் ஆனதோ?
அன்று அரசு சிரித்தது
தமிழன் அழுவதைக் கண்டு
இன்று பத்துவருடங்கள் கழிந்தும்
எமது அழுகை ஓய்ந்ததுவா?
பின்னைய எத்தனையோ யூலைகள்
கறுப்பு யூலையை மறக்கடிப்பனவாய்
வந்து போயின.
ஆயினும்
எம்மைப் போராடவைத்தது,
83 கறுப்பு யூலைதான்.
இனிய காலையின் கீதத்தை ரசிப்பதற்கு
எத்தனை முறை பிச்சை கேட்டுச் சலித்தோம்
பிச்சைக்கார அரசிடம்.
ஒப்பந்தம் என்று எத்தனை தடவை
நற்செய்தி கூறியது
தொடர்ந்தவை கறுப்பு யூலைகள்தான்
எதிர்பார்த்த வண்ணம்
முடிவற்று நீண்டுகொண்டே போகும் பல யூலைகள்.
எம் விடியல்?
மிக மிகத் தொலைவில்.

23-07-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தோ பரிதாபம்

என் இனிய மக்களே
வறுமை....... வறுமை..... வறுமை......
உங்களுக்கு ஏன் கவலை
சேவை நிறுவனங்கள் தான்
சமயத்தில் கை கொடுக்கின்றனவே
மில்லியன் மில்லியனாக
அதற்கு மேலும் பில்லியான் பில்லியனாக.
அந்தோபரிதாபம்
உங்களிடம் இருந்து பறிக்கப்படுவதோ
பல பல பல பில்லியன்
குருதிக் கலங்கள்
ஆனால் கிடைக்கின்ற
பில்லியன்களோ
மிகச் சில குருதிக்கலங்களுக்கான
விலையே.

10-07-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமிக்கும்
## வானுக்கும்
## அப்பால்

வானமும் பூமியும்
எங்காவது சந்தித்ததுண்டா?
எங்கோ ஓரிடத்தில்
மிகத் தொலைவில்
சந்திப்பது போல் ஒரு தோற்றம்
அது பொய்மையின் நிழல்
நான் தேடுவதோ
தோற்றம் அல்ல
உண்மை

01-09-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ கேட்க வேண்டியது

எத்தனை எத்தனையோ
அத்தனையும் இழந்தாகிவிட்டது
பந்தப் படுதலில்
திருமணம் என்ற பந்தத்தில்
உலகத்தின் இன்பம், துன்பம்,
விருப்பு, வெறுப்பு,
சிந்தனை, செயற்பாடு .........
அதிகமேன்? உணவு, உடை,
என்பவற்றின் மீதான சுதந்திரமான
விருப்பார்வத்தையும் கூட
இழந்தாகிவிட்டது
திருமணம் என்ற பந்தத்தில்.
இத்தனையும் இழந்து
தாலி என்ற வேலியை
உனக்கு நீயே போட்டுக் கொள்வது ஏன்?
உனது பாதுகாப்புக்கா?
இல்லை இது உனக்கு சிறை
நீ கேட்க வேண்டியது
நீயும் ஒரு மனிதன் என்பதை
உன் இருத்தலுக்கான சுதந்திரத்தை. 16-10-93



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமியே பார்

உன்னைத்தான் பூமியே
அங்குப் பார் உன் குழந்தையை-
தவறான வழியில் போகிறதை.
குழந்தைப் பருவத்திற்குரிய
குதூகலச் சிரிப்பைத் தரமறுத்த
தன்னை மனிதனாக ஏற்கமறுத்த
இந்தச் சமூகத்தில்
தன் மதிப்பை நிலை நாட்ட பணத்தைத் தேடிப் பகலிரவாக.....
கிடைத்துவிட்டது
பூமித்தாயே உன் குழந்தை தன்
விடா முயற்சியால்
பணப் புதையலைக் கண்டெடுத்து விட்டது
நாளை அக்குழந்தை
நவீன பணக்காரனாக..........
உன்னைத் தான் பூமித்தாயே
அங்கேபார் உன் குழந்தையை
தவறான வழியில் போகிறதை.

16-10-93.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது உண்மை

எப்போதுமே பிரகாசிக்கும்
நீண்டதான சிந்தனையைத் தூண்டும்
நிர்மலமான மேகம் உண்மையா?
இல்லை
காலத்தின் மாற்றம் உருவாக்கும்
கருமுகில்தான் உண்மையா?
எது உண்மை?

18-12-93

உலகம்
எத்தனை பெரியது
அங்கு
சிறு வண்ணத்துப் பூச்சிகளாக
ஆயிரமாயிரம் அசைவுகளுடன்
மனிதன்
முதிர்ந்த வளர்ச்சியில்
சிறகடிக்க விரும்பும்
வண்ணத்துப் பூச்சி
எதிரியின் வலைகளுக்குள்
பரந்தவெளியில்
நானும் சிறு
வண்ணத்துப் பூச்சியாக
எத்தனை மகிழ்வுடன்
சிறகடிப்பதாக
திடீரென
வலிய காற்று
எங்கோ சிறு மூலையில்
சிறகுடைந்து............
பறக்கத்தான் முடியவில்லை
இமை அசைகிறது.

20-05-94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண் மனிதனின் வெற்றி

அருமையான பொழுது போக்கு
கையில் பத்து ரூபாய்
இருந்தால் பெற்றாவிலிருந்து.
முதலில் வரும் பஸ்ஸில் தொற்றல்
பிறைவேட் வானோ
இன்னும் கொஞ்சம் ஸ்பெஷல்
சேலையுடுத்த பெண்களின்
இறுகிய முதுகுதடவி.
பேதைகளின்
உருண்ட திரண்ட மார்புகள்
அவைகள் விழுந்து விடாது
தாங்கிப் பிடித்து
நிலைதடுமாறி விழுகின்ற
பெண்களின் கரங்களுக்கு
உதவிக்கரம் நீட்டி
இத்தனையும் அநுபவிக்கலாம்-
நாக்கிழிப் புழுக்களாக நெளியும்
பெண்கள்
இருக்கும் வரையில்.

10-07-95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசனை

அன்றொரு நாள்
என்னைப் பிரசவித்தாள்
என் அம்மா
உணவும் காலமும் என்னை
வளர்த்துக் கொண்டே
பள்ளியில் பயின்றது பாடம்
நண்பர்களிடத்திலோ
அநுபவக் கல்வி.
அத்தனையும் கற்றேன்
மனிதன் என்பதற்காக.
பிரசவித்த அன்று ரசித்திருப்பேன்
அம்மாவின் பரிசத்தை
இதமான மடிச்சூட்டை ரசித்திருப்பேன்
காற்றை ரசித்தேன்
கடலை ரசித்தேன்
சூரியனை ரசித்தேன்
வயலை ரசித்தேன்
மண்ணை ரசித்தேன்
மனிதனை ரசித்தேன்
உப்புக்கரிக்கும் அவன்
வியர்வையை ரசித்தேன்
அத்தனையும் ரசித்தேன்
தனிமை
என்னை ரசிக்காத வேளையில்.

19-08-95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைப் பனையடிக்கு உரிய பொருள்

நெடிதுயர்ந்த
ஒற்றைப்பனை மரம்
மெல்லியதும்புகள் முறுக்கப்பட்ட
கயிற்றில் பிணைக்கப்பட்ட மாடு.
கண்ணிற் கெட்டும் நிறைந்த புற்கள்
ஆகா எத்தனை இனிமையானது அது.
காலடியில் இருந்த புற்கள் மறைந்தன.
அதோ சற்று எட்டத்தில்........
அவையும் மறைந்தன
அப்பாலான பச்சைப் புற்கள் தான்
எனக்குத் தேவை
ஒற்றைப் பனை மரச்சுற்றாடலின்
காலடிப் பச்சை சிறிதாகிவிட்டதே
அக்கரைப் புற்கள் நோக்கிய நகர்வு
எவ்விதம் சாத்தியம்?
இது என்ன? என் கழிவுகள்.
இத்தனையும் விட்டுச் சென்றேனா?
பனைநிழல்
இப்போது
எவ்வளவுதூரம் சென்று வந்தேன்
உண்டகளைப்பில் வெகுவான தூக்கம்!
இரை மீட்டல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை யென்ன?
வாலிலும் முதுகிலும்
பேனுக்கு அலைகின்ற காகங்கள்
வாலை அசைத்தால் மீண்டும் குத்தும்
சீ! தொலைந்து போங்கள்.
எழுந்து நின்றேன்
எங்கே எனக்குப் புல்?
நடந்தேன் நடந்தேன்
நடந்து கொண்டிருக்கிறேன்
புல்லைக் காணவில்லை.
அங்கே சிறு காற்று
பச்சை மணம் அடிக்கிறது.
காலை வைத்தேன்
கழுத்தில் ஏதோ ..........
எங்கோ இதைக்கண்டேனே
ஒற்றைப் பனையடியில்
மறுகாலை வைத்தேன்
கழுத்தை இறுக்கிறதே!
இதென்ன தடுக்கிறதே
இத்தனை நாள் இது எங்கிருந்தது?
ஆக நான்
ஒற்றைப்பனையடிக்கு
உரிய பொருள்.

07-09-95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் மீண்டும்

உன்னை
திரும்பவும் எனக்கு
அறிமுகம் செய்.
அதில் தவறில்லை.
அன்று
நான்
நானாக
இருக்கவில்லை
அதனால்
திரும்பவும்
அறிமுகமாவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாணம்

இனி
நான்
என்னதான் கூறமுடியும்?
வாழ்க்கை வாழ்வதற்கே
இருப்பினும்
ஒரே ஒரு முறை
நிர்வாணமாய்
உன்னை
நீயே
பார்த்துக் கொள்
உன் உறுப்புக்கள் எல்லாம்
சரிவர உள்ளனவா என்றும்
மீண்டும் மீண்டும்
திடம்படுத்திக் கொள்.
சந்தேகம் தீரும்வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணத்தின் அழைப்பு

மீண்டும்
நினைவுகள்
கானகத்தில்
காணாமல் போயின
துயர ஓலங்கள்
ஒலிபெருக்கியில்
அழைப்பு விட்டுக் கொண்டன
நாளையும், இன்றும்
அழுவதற்கு கண்ணீர் கிடையாது
வார்த்தைகள் மட்டும்
எதிர்காலம் குறித்த தேடலில்
நுழைய ஆரம்பிக்கையில்
பிணம்
எரிந்து கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைய தலைமுறைக்கு

கனவுகளை மட்டும்
பத்திரப்படுத்தி
நாளைய தலைமுறைக்கு
கையளிக்க வேண்டிய
கடப்பாடுடன் கூடிய
சுதந்திர உணர்வுடன்
ஒவ்வொரு நாளுமா
இயங்கிக் கொண்டிருக்கிறோம்?
இலக்குத் தெரியாமல்
நகர்ந்து கொண்டிருக்கிறோம்
எல்லாமே அவசரம். அவசரம்.
இருப்பதைத் தொலைத்திடவும் தான்

13-05-96.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படியிருக்கிறாய்

இப்ப
சாப்பாடு எல்லாம் முடிகிறதா?
சாப்பிடு நல்லாய் சாப்பிடு
ஒன்றுமே விளங்கவில்லையா?
உலகை மறந்து விடு
தூங்கு - நல்லாய் தூங்கு
இல்லையா?
கற்பனைகளை ஓடவிடு
இன்ப உணர்வுகளை விழித்தெழச் செய்
அதன் மமதையில் மயங்கிவிடு
பின்பு நிதானமாக எழும்பிவருவாய்
வழமைபோல்
உன் அன்றாட வேலைகள்
மீண்டும் இதே சிந்தனை
எல்லாம் முடிகிறதா?
சாப்பிடு - நல்லாய் சாப்பிடு
மீண்டும் இதே சிந்தனை
எத்தனை கோணத்திலிருந்து
வாழ்வு - இது தான் மனிதவாழ்வு
மீண்டும் மீண்டும் பெருமூச்சுவிடு
நல்லாய் - உள்ளே இழுத்துவிடு
சிறுநீர் விட வேண்டும் போலுள்ளதா
சந்தோஷமாக
அந்த மாபெரும் பணியை முடி
இப்ப எப்படியிருக்கிறாய்
சாப்பாடு எல்லாம் முடிகிறதா?
சாப்பிடு நல்லாய் சாப்பிடு
மீண்டும் இதே சிந்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இனிய அப்பாவுக்கு

உங்களால் முடிந்தவரை உழைத்தீர்
முடிந்தவரை வளர்த்தெடுத்தீர்
அன்பான அரவணைப்பை
நிறையவே வழங்கினீர்
ஆனாலும் சில சந்தர்ப்பங்களில்
முரண்பட்டோம்
அதையும் என் வளர்ச்சியாகக் கருதினீரோ?
அன்பை வாரிவழங்கினீர்
உங்கள் உழைப்பால் எம்மை
வளமாக்க முடியாதென்றெண்ணியோ
உமது இறப்பின் மூலம் எம்மை
வளமாக்க எண்ணினீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அன்று உமது
சொல்லுக்கு
பணிந்தோ, பணியாமலோ
சுதந்திரக் காற்றில் வளர்ந்தோம்
இன்று
எல்லோர் மொழிக்கும்
பணியும் நிர்ப்பந்தம்-
நீங்கள் எங்கு அறியப்போகின்றீர்
உம்மை விலக்கியவர்கள்
உமக்காக அனுதாபப்படுவதை
அவர்கள் தம்
இரங்கலில் தாம் வாழப் போவதை
இத்தனையையும் விட
என் விழியோரங்களில்
நீர் திரளுவது
என்னால் உங்களை
பராமரிக்க முடியவில்லையே
என்ற ஏக்கம்தான்

20-08-1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமிக்கும் மனிதம்

முகமறியா ஒருவன்
ரொம்ப உரிமையுடன்
என்னை அழைத்தான்
தேநீர் அருந்துங்கள்
உங்கள் மனச் சோர்வுக்கு
உகந்த மருந்து
இதனை விட என்னால்
இதமாய் ஒன்றும் செய்ய முடியாது
தயவு கூர்ந்து இதற்காக
என்னை மன்னியுங்கள்
மீண்டும்
என் முதுகைத்
தடவிக் கொடுத்துச்
சென்றானவன்.
சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிறான்
அவனும் போய்க்கொண்டிருக்கிறான்
நான் மட்டும்.............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"

டயரியின் முதல் பக்கத்தைப் பார்க்கிறேன்
என்னுடைய குறிக்கோள்கள்
அழகாக எழுதப்பட்டுள்ளன.
மீண்டும் மீண்டும்
அதனை
வாசிக்கும்படி தூண்டுகின்றது

"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28-01-92

புதுவருடம் ஆரம்பமாகி (ஆங்கிலப்புதுவருடம்) 28 நாட்கள் ஆகின்ற வேளை நீண்ட நாட்களாக விட்டிருந்த குறிப்பெழுதும் வேலையை ஒரு திடசங்கற்பத்தோடு மீண்டும் ஆரம்பிக்கின்றேன். நான் எப்படி இருக்க வேண்டும் என தீர்மானித்து உள்ளேனோ அதே போல் இருக்க வேண்டும். இருப்பதற்கான வேலைகள் செய்ய வேண்டும். 2 கிழமைகள் நீர்கொழும்பில் கழித்துவிட்டு இன்று திரும்பிய எனக்கு நண்பர்களின் கடிதக்கட்டு மிகவும் உற்சாகத்தை அளித்தது. ஒரே தடவையில் எல்லோரிடம் இருந்தும் (வானம்பாடிகளிடமிருந்து தவிர) பெற்ற கடிதத்தை வாசித்து மிகவும் சந்தோஷம். மகிழ்ச்சியான இந்த வேளையில் என்னுடைய குறிக்கோள்களை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

*i.* கற்றல்
*ii.* அறிதல்
*iii.* வாழ்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08-02-93

நான் யார்?
என் நோக்கம் என்ன?
எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறேன்?

10-02-93

இங்கே என்னுடைய இயற்கை ரசிப்பும், இனிமையான ஒரு மாலைக்காட்சியும், எதிர்காலத்தின் வாழ்க்கைப் போக்கைப்பற்றிய கற்பனையும் எழுதப்படாமல் போய்விட்டன.

11-02-93

ஒரு மனிதன் முன்னுக்கு வருகிறான் என்றால் அவனை வீழ்த்துவதற்குத்தான் எத்தனை முயற்சிகள். சிந்தனை ஒரு சூழலிலும், இருத்தல் ஒரு சூழலிலுமாக வாழ்வது என்பது மிகக்கடினமான ஒரு செயல் முறை. என்னால் இருத்தலில் இருந்து பிரிதல் என்பது முடியாமல் இருக்கின்றதே. அவ்வாறு செய்வது மனிதத் தன்மையற்ற ஒரு செயல் போலும். பெரும்பாலான சமயங்களில் சாந்தி என்று ஒருத்தி இருக்கிறாளா என்றே தெரியாமல் போய்விடுகிறது. நான் படிக்க ஆசைப்படுகிறேன். எவ்வளவு அதிககாலம் வாழ முடியுமோ அத்தனை காலமும் வாழ வேண்டும் என்று விரும்பிய நான் ஏனோ என்னையும் அறியாமல் செத்துப்போய்விடுவேனோ என யோசிப்பு வருகிறது........... ஒரு குறிக்கோளே இல்லாது நகர்வது போல் ஓர் தோற்றம்.

17-02-93

எனது மனக்குழப்பங்களுக்கு அரைகுறை அறிவும், எமது சமூகவியல், சமூக நடவடிக்கைகள் போன்றவற்றை நான் அறிந்து அல்லது கற்றுக் கொள்ளாமையே காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18-02-93

ஒரு காலத்தில் பணத்தைச் செலவழித்து, காலத்தைச் செலவழித்து புத்தகங்களைப் படித்தபோது புத்தகம் மேன்மையானது. படித்துமுடித்து பின்னர் இக்காலத்தில் கறையான் அரித்துச் செல்லரித்துப் போன புத்தகம் குப்பையில். இந்நிலைமைக்குக் காரணம் அறிவுடன் இணையாத கல்வியா? வாழ்வுடன் இணையாத கல்வி முறையா?

20-02-93

நண்பர்களின் கடிதங்கள் தான் எத்தனை எழுச்சிகளைத் தருகின்றன எனக்கு. பல சந்தர்ப்பங்களில் இவை எனக்கு துணையாக நிற்கின்றன. எத்தனைவிதமான நண்பர்கள், ஒவ்வொரு எண்ணங்களை உருவாக்குகின்ற எழுத்துகள், மீண்டும் மீண்டும் வாசிக்கத்தூண்டும், சிந்திக்கும் தோழியின் கடிதம், அன்பாய்த் தழுவும் தோழர்களின் எழுத்து. ஆசையாய் பார்க்கும் நண்பனின் எழுத்து எத்தனை விதமான எழுத்துகள்.

23-02-93

இங்கே படிப்பது என்பது அவ்வளவு சுலபமாகவில்லையே. ஆனாலும் நான் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் என்ற எண்ணத்துடன் கடுமையாகப் படிக்கிறேன். இம்முறை பாஸ் பண்ணாவிட்டால் என்னுடைய இலக்கில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்து விடுவதற்கான சாத்தியம் உண்டு. நினைக்கும்போது பயமாக இருக்கிறது. நாமும் சமூகத்தின் பிழையான நீரோட்டத்தில் அடிபட்டுப் போய்விடுவோமா? என கேள்வி எழுகிறது. பரீட்சை எடுத்தபின்னர் கட்டாயம் ஒரு சுற்றுலா செய்யவேண்டும்.

ஷஷமோகவாசல்" ரஞ்சகுமாரின் ஷஷகபரகொய்யா" சிறுகதை சிந்திக்கக் கூடியது. ஷஷசுருக்கும் ஊஞ்சலும்" எளிமையான விடயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமான செய்தியைக் கூறியிருந்தது. ஏனையவை அடுத்த ஞாயிற்றுதான் வாசிக்கவேண்டும்..

24-02-93

என்னுடைய குறிப்புகள் அனைத்தும் என்னைச் சுற்றிய குறுகிய வட்டத்திற்குள்ளேயே இருக்கின்றனவே.

வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தகப்பனார் விண்ணப்பம் கொண்டுவந்து கொடுக்கிறார். அதே நேரம் தாயார் மூலமாக வெளிநாடு அனுப்ப முயல்கிறார். இதையே அவர் ஏன் செய்யக்கூடாது. தன்னைப்பற்றி புரிந்துகொள்ளக்கூடாது என்றா? இவர்கள் எண்ணத்தில் தப்பில்லை. ஆனால். என்னை அல்லவா தியாகம் செய்யச் சொல்கிறார்கள். நான் தியாகம் செய்வது என் குடும்பத்துக்காகவா அல்லது . . . . . . . .

படிக்கிறேன் பாசோ பெயிலோ என்னை வெளிநாடு அனுப்பப்போகிறார்கள். இதிலிருந்து எப்படித்தான் விடுபடுவதோ? கட்டாயம் நான் பாஸ்பண்ணியே ஆக வேண்டும்.

* தியாகம் என்பது பூசி மெழுகப்பட்ட அழகான வார்த்தை.

06-03-93

பேர்ட்டண் ரஸலின் ஷதிருமண முறைகள்" மொழி பெயர்ப்பு வாசித்தேன். மற்றும் கவனம் தேடல் ஏன்பனவும். ஓ........... ரமணி உன்னுடைய கவிதை எனக்கு மீண்டும், மீண்டும் யாழ்நகரை வரவழைத்த வண்ணம்.......... உன் கனவுகள், எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் அழித்துக் கொள்ளவைத்து விட்டதே இந்தப்பாழும் சமூகம். இன்னும் சற்று முயன்றிருப்பாயானால் உன்னை இந்தச் சமூகமும் சமூகத்தை நீயும் இழந்திருக்க முடியாது. உன் இருத்தலுக்கான காரணத்தையும், உன் இருத்தலுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையையும் இச்சமூகம் புரிந்து கொண்டு இருக்கும். ஆனாலும் உன் உடலைத் தவிர உன்னுடைய கனவுகள், எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் அனைத்தும் காவப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. "எனக்கு உண்மைகள் தெரியவில்லை பொய்களைக் கண்டுபிடிப்பதும் இந்த இருட்டில் இலகுவான காரியமில்லை" இதனால்தானோ என்னவோ நீயே மறைந்து விட்டாய் உன்னை மீண்டும் மீண்டும் எம் மனத்திரையில் இருத்திப் பார்த்துக் கொள்கிறோம். (ரமணி - அகாலமரணமெய்திய சிவரமணி எனும் கவிஞை (தொ-ர்)

06-04-93

இங்கு ஒருவர் உணர்வுகளை புரிந்து கொண்டவர்கள் இல்லை. புரிய முயற்சி செய்பவர்களும் இல்லை. உன் உணர்வை மதிக்க என்னால் முடியாது. என் உணர்வை மதிக்க உன்னால் முடியாது. முடிவில் எஞ்சுவதோ வீண் விவாதங்களும், மனக்கசப்புகளுமே. இன்பம் என்பது இவர்களுக்கு எட்டாதனவாகவே உள்ளது. என் உணர்வுகள் என் விருப்பு வெறுப்பினடிப்படையில் எழுப்பப்படுவதாக இருக்க வேண்டும். ஆனால் என் உணர்வு மற்றவனின் எண்ண அடிப்படையில் அவனுக்கெதிராகவோ, அவனை வீழ்த்துவதற்கா கவோ கட்டி எழுப்பப்படுகின்றன. இப்படிப் பார்க்கும்போது நடுத்தர வர்க்கத்தில் உணர்வுகள் என்பது தன்னிஷ்டப்படி அமைவதில்லை. பாசம், நேசம், அன்பு அனைத்துமே பொருளின் அடிப்படையிலேயே இங்கு பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

11-04-94

புதுவருடத்துக்கு இன்னும் 3 நாட்கள். வீதிகளிலும் சந்தை களிலும் ஒரே சன நெருக்கடி. வாணவேடிக்கைகள், சீன வெடிகள் இவற்றின் சத்தங்கள் ஒரே இரைச்சல். ஒவ்வொரு ஈக்கிள் வாணமும் பூமியைவிட்டு வானுக்கு வெளியேறும்போது ஏற்படுகின்ற சத்தம். ஒவ்வொரு தடவையும் சத்தத்துடன் சீறிப்பாய்ந்து பலரின் உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் காவு கொள்ளும் ஷெல்களின் நினைவை எனக்கு ஏற்படுத்துகின்றன. மேலதிகமாக இருக்கும் பணத்தை செலவழித்து விடும் நோக்கம் சிலருக்கு. எப்படியாவது வருடப்பிறப்பை சிறப்பாகக் கொண்டாடிவிடத் துடிக்கும் பெரும்பாலானவருக்கு இம் முறையாவது கொண்டாடமுடியுமா? ஆண்டவா நீ தான் கருணை செய்ய வேண்டும் என துடிக்கின்ற மிகப் பெரும்பாலானவர்க்கு எல்லாவற்றிலும், எங்கும் ஒரே முரண்பாடுகளே. முரண்பாடுகளை அகற்றுவதற்கு வழியே இல்லையா?

(வருடப்பிறப்பு)14-04-93

ஒரு தொழிலாளர் குடியிருப்பை இன்று தான் நான் பார்த்தேன். மிகவும் நெருக்கமான சூழ்நிலையில் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்தவர்களாக இங்கே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவது சுலபமாகவே இருக்கும். முன்பு எனில் இத்தகைய ஒரு குடியிருப்புக்கோ அல்லது அங்கு குடியிருப்பவர்களிடமோ செல்ல வீட்டார் அனுமதிக்கவும் மாட்டார்கள். எங்களுக்கும் இந்தச் சிந்தனை ஏற்பட்டிருக்காது.

19-04-93

உறங்கிப் போன கிராம மக்கள் எழுந்து பார்த்த போது, தாம் தங்கிச் சென்ற இடங்களை நேர்த்திசெய்து விட்டு, இரவோடிரவாகத் தோழர்கள் சென்றிருப்பதற்கான அடையாளங்களை கண்ணுற்று எவ்வளவு அழகாக உண்மையாக நேசத்துடன் ஒரு கவிதையில் கூறுப்பட்டுள்ளது. மே 1ம் திகதி எத்தனையோ போராட்டங்களின் பின்பு தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வென்றெடுத்த நாள் இந்தத் தினத்தை நினைவுகூர எம்மவர்கள் இங்கே தகுதியானவர்கள் தானா? இல்லை. ஆனால் இதை வைத்து இன்னமும் தொழிலாளர்களை ஏமாற்றவே முயற்சி செய்கிறார்கள். தேவைக் கேற்றவாறு நிறத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்திகள் போல்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுடன் இணைந்துகொண்டு பொதுக்கூட்டமாம், முற்றவெளியிலாம். இன்னமும் கூட ஏமாற்றி விடலாமென கற்பனை செய்யும் கோமாளி மனிதர்கள் இவர்கள் பேச்சு மிகவும் திறமையாகவும், அறிவு ரீதியானதாகவும் தோற்றும். ஏனெனில் தொழிலாளரை, தமிழரை நன்கு அறிந்து சமூகத்தின் விடுதலைக்காய் உழைக்கும் பொருட்டு வந்தவர்கள் அல்லவா? செப்பதாகைகள் தயாரிக்கிறார்களாம். குடியும் கும்மாளமுமாக நடுநிசி வேளைகளில்........... தொழிலாளருக்காக குரல் கொடுக்கும் உண்மையான ஒரு மனிதனை எங்கு காணலாம்?

01-05-93

இன்று மேதினம். தொழிலாளர்களே நீங்கள் இது வரையில் வென்றெடுத்த உரிமைகளுக்காகவும், இனி மேல் வென்றெடுக்கப் போகின்ற உரிமைகளுக்காகவும், எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன் உங்களுடன் இணைந்து கொள்ளவும் விரும்புகின்றேன்.

06-05-93

அப்பாவுக்கு இப்போ வேலைஇல்லை. பொழுது போகவில்லையென புத்தகம் வாசிக்கிறார். அவர் இயல்பு புத்தகம் வாசிக்கத் தொடங்கினால் அருகில் நடப்பது எதுவும் தெரியாது. அம்மா வீட்டின் மூலையில் ஒரு சமையலறையாக ‘‘அப்பாவுக்கு புத்தகம் வாசிக்கத் தொடங்கினால் உலகமே தெரியாது’’ எனக்கூற ‘‘அம்மாவுக்கு தான் புத்தகம் வாசிப்பது பொறமையாக இருக்கிறது’’ என அப்பா கூற....

உண்மையில் இங்கு ஒருவர் உணர்வை ஒருவர் புரிந்து கொள்வதுமில்லை. புரியமுயற்சிசெய்வதுமில்லை. முன்னர்கூட ஒரு பக்கத்தில் இதை எழுதியதாக ஞாபகம். உண்மையில் அப்பாவுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுபோகவில்லைதான். அவருக்கு பொழுது போவதற்காக அம்மாவுக்கு உதவலாம். வேலைகளை உருவாக்கலாம். அதை அவர் விரும்பவில்லை. நான் ஏன் வேலை செய்ய வேண்டும் என்ற நோக்கமோ அல்லது நான் வருத்தக்காரன் எனக்கு வேலை செய்ய முடியாது என்பதாகவோ இருக்கலாம் ஏற்கனவே பிள்ளைகளின் வளர்ச்சி சிந்தனை இவரின் மேம்போக்கான ஆடம்பரமிக்க எண்ணங்கள் சிந்தனைகளை கண்டிப்பதாக இவருக்கு எதிரான கருத்துகள் வைக்க, அம்மா பொருளாதாரம் போதாமையினால், அளவுக்கு மீறிய வேலைப்பளுவினால் ஏற்படும் மன உளைச்சல்களால் இவரைக் கண்டிப்பதாயிருக்க இவர்கள் அனைவரும் தனக்கு உழைப்பு இல்லாமை காரணமாக தன்னைப் புறக்கணிப்பதாக அவருக்கு ஒரு எண்ணம். தன்னை உதாசீனப்படுத்தும் அவர்கள் மீது (பெரும்பான்மை அம்மா) எரிச்சல். எந்த நேரத்திலும் எந்தச் செயலிலும் ஏதாவது ஒரு குற்றங்காணல்.

அம்மாவை எடுத்துக்கொண்டால் அவர் புத்தகம் படிப்பது அவவுக்கு பொறாமையாகக் கூட இருக்கலாம். தனக்குப்படிக்க ஆவலாக இருந்தும் குடும்பங்களின் சுமைகாரணமாகப் படிக்கமுடியாத நிலை. சமையலில் சிறிதளவு உதவி செய்தால் தனக்கும் சிறிதளவு ஒய்வுகிடைக்குமே தானும் வாசிக்கலாமே என்ற எண்ணம். இவை பொறாமையாக மாறுவதிலும் அர்த்தம் இருக்கவேதான் செய்கிறது. இவர் வளர்க்கப்பட்ட கருத்துநிலை, சூழல், குடும்பத்துக்கு பணியாற்றுவது தன்கடமை, பணி என எண்ணவைத்துள்ளது. இந்த நிலையில் குடும்பத்துக்காக தன் சுகங்கள் அனைத்தும் விட்டுக் கொடுத்து நாள்பூரா குடும்பத்துக்காக உழைக்கும் நிலையில், அந்தப்பணியில் குற்றம் இருப்பினும், இல்லாது விடினும் அவரின் குற்றம் கண்டுபிடிக்கும் இயல்பானது அம்மாவின் நிலையில் மிகவும் வேதனையளிப்பதாகவும். தன் பிறப்பின் மேலேயே பழியைப்போட்டு தன்னையே குற்றம் கண்டுபிடிப்பதாகவும், ஏற்படுகின்ற மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளைச்சல்கள் அப்பாவுக்கு எதிரான சுடுசொற்களாக மட்டும் திரும்புவதில். இந்த குடும்ப அமைப்புக்குள் எத்தனை முரண்பாடுகள் மன விகாரங்கள்.

அப்பாவுக்கு உழைப்பது மட்டுமே வேலை, அம்மாவுக்கோ சந்தைக்குப் போவது முதற்கொண்டு அப்பாவுக்கு பிள்ளைகளுக்கு பணிசெய்வது, அவர்கள் குற்றங்களைப் பொறுத்துக்கொள்வது வரை அம்மா என்றொருத்தியின் மனைவி என்றொருத்தியின் மனநிலையை புரிந்து கொள்வதாக யாரும் இல்லை.

நேற்றையதினம் அவர் வருத்தம் காரணமாக இரண்டாம் தடவை தேநீர் வழங்க மறுத்துவிட்ட அம்மா அவர் வழங்கிக்கூட இருக்கலாம். ஆனாலும் அம்மாவின் சிந்தனை கணவன் வருத்தங்களில் கவனம் செலுத்துவதாக இல்லையென மறுத்துவிட ........ இன்றோ அம்மா ஒரு நேரம் கூட தேநீர் அருந்தவில்லை. அவருக்கு நேரத்தில் கொடுக்கும் தேநீர் கூட வேண்டாம் என்ற வீம்புநிலை. அம்மாவின் மனநிலை வேதனை.

தற்போது கூட இன்று காலை தொடக்கம் பி.ப 6.00 மணி வரை பிரேமதாசாவின் இறுதிக்கிரியை ரீ.வீ யில். மதியம் சமையல் வேலை முடித்து சிறிது நேரம் இவர் பார்த்தார். முக்கியமான இறுதிக்கிரியை நடைபெறும் சமயம் குசினிக்குள் அம்மா. ஏன் எனக் கேட்ட போது பார்த்து முடிந்ததும் எல்லோரும் பசி என வருவார்கள் அப்பொழுது நானும் வந்து என்ன செய்ய எனக் கேட்டார்.

இதைவாசிக்கும் ஒருவருக்கு என்ன இந்த சிறிய விடயங்களை எல்லாம் பெரிதாக எழுதி ........ இது கணவன் மனைவிக்கு இடையிலான ஊடல்கூடல்தானே என்பார்கள். எனக்கு இது சிறுவிடயமுமல்ல. ஊடல் கூடலுமல்ல. எமது குடும்பங்களின் பிழையான அமைப்பு முறையே அனைத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12-05-93

ஏதாவது வாசித்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன. ஆர்வமாக படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படித்தாலும் முடியவில்லை. பாடங்கள் திருப்பிக்கேட்டால் மறந்துவிட்டது, என்ன செய்யப் போகிறேனோ ஆண்டவனின் தோட்டத்திலே அழகுசிரிக்குது இங்கு ஆகாயம் பூமி எல்லாம்............ ஈஸ்வரியின் குரலா? சுசிலாவின் குரலா? மிகவும் இனிமையான ஓசையுடன் கூடிய இசை.

09-06-93

டயரியின் முதல் பக்கத்தைப் பார்க்கிறேன் என்னுடைய குறிக்கோள்கள் அழகாக எழுதப்பட்டுள்ளன. மீண்டும் மீண்டும் அதனை வாசிக்கும்படி தூண்டுகின்றது. அம்மாவை இன்று பாராட்டவேண்டும். 500/= வட்டிக்குக் கடன்படாமல் தனது தோடுகளை 500/= க்கு விற்றதாக. இன்றைய தேவை பூர்த்தியாகிவிட்டது. நாளைக்கு தங்கைகள் கேட்டுக்கொண்டு இருந்த பணத்தைக் கொடுப்பதற்கு ஏதாவது வைத்துள்ளாவா? தங்கள் படிப்புக்காக செலவாகும் பணத்தையிட்டு மிகவும் கவலைப்படுவதாகத் தெரிகிறது. இது அவர்களில் ஊறிவிட்டால் படிப்பு பாதிப்படைந்துவிடுமே. கோழிக்கூடு போடுவதாக என்று இருக்கும் லோன் கூட எங்கு போய்விடுகிறதோ? அம்மா மிகவம் வலுவிழந்து விட்டார். அப்பா அலுப்படைந்து விட்டார். நானுனம் பாவம் தானே. என்ன செய்ய நான் .......... ஒரு பக்கத்ததில் பெற்றோர்கள். இன்னொரு பக்கத்தில் என்னுடைய குறிக்கோள்கள். இரண்டில் ஒரு பக்கத்தையும் ஒதுக்க முடியாமல் உள்ளது என்ன செய்வது. அழுகைதான் வருகிறது. நடப்பது நடக்கட்டும் என்று தான் இருந்துவிடமுடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04-01-94

இப்பொழுதெல்லாம் என் சிந்தனை செயற்பாடுகள் அற்றிருப்பதேன்? சோம்பலா? அப்படியும் சொல்வதற்கில்லை. ஏனைய வேலைகளை சுறுசுறுப்புடன் ஆற்றிமுடிக்கும் எனக்கு எப்படிச் சோம்பல் உருவாகும்? அப்படியானால் இந்தவிடயத்தில் எனக்கு ஆர்வமில்லையா? அப்படியுமில்லை. அப்படியெனில் சுதந்திர உருவமான பெண்ணைப் பற்றி கதைக்க முடியாது. கதைத்தால் பின்னர் என்னை மற்றவர்கள் சுதந்திரம் கதைத்த நீ இவ்வாறு செய்யலாமா? எனக் கேட்க இடமேற்படும். நான் அதற்கு இடைஞ்சலாகவும் இருக்கவேண்டும்? இதில் ஆர்வமில்லாவிட்டால் மற்றவர்கள் என்னைக் கீழ்படுத்தமுனையும்போது எப்படிக் கொதிப்படைய முடியும்? எப்படி அவற்றை அடையாளம் காணத்தான் முடியும்? அப்படி இல்லையெனில் ஏன் வாசிப்பதில் சுறுசுறுப்படைகிறாய் இல்லை? அவற்றைச்சிந்திக்கிறாய் இல்லை? செயல்படுகிறாய் இல்லை, அதை நணபர்களுடன் பகிர்ந்து கொள்கிறாய் இல்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

மட்டக்களப்பு,
திருகோணமலை
தள வைத்தியசாலைகளின்
மருத்துவர்கள்,
தாதியர்கள்,
ஊழியர்கள்,
மட்டக்களப்பு வாசகர்வட்ட அன்பர்கள்
உறவினர், உற்றவர்,
செய்திவழி அஞ்சலிகள் செய்தோர்,
பல் வழிகளிலும் உதவிய நண்பர்கள்,
நூல் வெளியீட்டில் சம்பந்தப்பட்ட சகலர்க்கும்.

A. KUGAN
77/2nd LANE
ANANDA PURI
TRINCO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"

இங்கே என்னுடைய
இயற்கை ரசிப்பும்,
இனிமையான
ஒரு மாலைக்காட்சியும்,
எதிர்காலத்தின்
வாழ்க்கைப் போக்கைப்பற்றிய
கற்பனையும்
எழுதப்படாமல் போய்விட்டன.

"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org